# நீர்ப்பாசன அமைச்சு

# கேள்விகளுக்கான அழைப்பு

IWWRMP

## ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

**செயற்றிட்ட இலக்கம்: P166865. கடன் இல. IDA-6621-LK**

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (உலக வங்கி) ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக (IWWRMP) கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

2. ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளர் 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுவின் சார்பில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை அழைக்கின்றார்.

**01ஆம் அட்டவணை**

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அனுபவம் / CIDA பதிவுத் தரம் | கேள்விப் பிணை முறி / செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | சராசரி வருடாந்த நிர்மாண வேலைகளின் அளவு மற்றும் ஆகக் குறைந்த திரவச் சொத்துகள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-163059-CW-RFB | கரியாலை நாகபடுவான் குளத்தை புனரமைத்தல் (ஒப்பந்தக் காலம்: 365 நாட்கள்) | C3அல்லது அதற்கு மேற்பட்ட தரம்<br>விசேடத்துவம்:<br>நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | பிணை முறியின் பெறுமதி:<br>ரூபா 6,710,000.00<br>செல்லுபடிக் காலம்: 2025-10-13ஆம் திகதி வரை | 56,000.00 | 670.00 மில்லியன் ரூபா மற்றும் 112.00 மில்லியன் ரூபா |

3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கேள்வி ஆவணத்திலுள்ள பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திரமான கேள்விதாரர் மேற்படி அட்டவணையில் வேலைகளுக்கு எதிரில் தரப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு விசேடத் துறையில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. கேள்வி ஆவணங்கள் **https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices** எனும் இணையதளத்தில் பரீட்சித்துப் பாக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-07, இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, மகாவலி நிலையக் கட்டிடம், 2ஆம் தளம், **IWWRMP** செயற்றிட்டம், சிரேஷ்ட செயற்றிட்ட நிபுணரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2025-03-17ஆம் திகதி முதல் 2025-04-17ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இதே முகவரியில் முன்னறிவிப்பொன்றைச் செய்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்பிலக்கம்: 0112691163)

6. வளமுள்ள கேள்விதாரர்கள் 2025-03-17ஆம் திகதி முதல் 2025-04-17ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் முன்னறிவிப்பொன்றைச் செய்து (தொடர்பிலக்கம்: 0112691163) மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி (தொகைக்கு 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 செயற்றிட்டப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு நிறுவனக் கடிதத் தலைப்பின் ஊடாக எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து அல்லது இலங்கை வங்கியின் ஹைட்பார்க் கோணர் கிளையில் ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தினால் பேணப்படும் **7042633** எனும் கணக்கிலக்கத்திற்கு இயைபுடைய மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் iwwrmp@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துமூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்து ஒரு தொகுதி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்வி முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத்தள விஜயம் இடம்பெறும். கேள்விதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**02ஆம் அட்டவணை**

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலைத் தள விஜயம் | கேள்வி முன்னோடிக் கூட்டம் | கேள்விகள் முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-163059-CW-RFB | திகதி: 2025-03-25<br>நேரம்: மு.ப. 10.00 மணி<br>அமைவிடம்:<br>பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர்,<br>பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம்,<br>கிளிநொச்சி மேற்குப் பிரிவு,<br>வில்சன் வீதி, கிளிநொச்சி | திகதி: 2025-03-27<br>நேரம்: பி.ப. 2.00 மணி<br>மாநாட்டு அறை, **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 | திகதி: 2025-04-21<br>நேரம்: பி.ப. 2.00 மணி |

8. கேள்வி ஆவணத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரரினால் கையொப்பமிடப்பட்டு அவரது முத்திரைக் குறி பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. நகல் பிரதிகளுடனான கேள்விகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயற்றிட்டப் பணிப்பாளர், **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அதன் பின் கேள்விகள் உடன் திறக்கப்படும். கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகளான இருவருக்கு (2) மேற்படாத நபர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2ஆம் மாடி, மகாவலி நிலையக் கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு - 07.**

**2025-03-12**